# ஸ்டெர்லைட்டுக்கு அரசு எதிர்ப்பு;போலீஸ் ஆதரவா?
## உயர்நீதிமன்றம் சரமாரிக் கேள்வி

மதுரை, ஜன.30-

ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக் கூடாது எனப் பேசுவது எப்படி குற்றமாகும் என சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் கேள்வி யெழுப்பியுள்ளனர். மேலும் ஸ்டெர் லைட்டுக்கு ஆதரவாக காவல்துறை செயல்படுவதாகவும் கருத்து தெரிவித்துள்ளனர்.தூத்துக்குடியைச் சேர்ந்த மோகன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்தி ருந்தார். அதில், “தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூட வலியுறுத்தி கடந்த மே மாதம் மக்கள் ஊர்வலம் நடத்தினர். அப்போதுகாவல்துறையினர் ஊர்வலத்தில் சென்றவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 14 பேர் உயிரிழந்த னர். இந்த துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பாக சிபிஐ மற்றும் அருணா ஜெகதீஷ் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது.ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப்போராடியவர்கள் மீது காவல்துறை யினர் பொய் வழக்குகளை பதிவு செய்துதுன்புறுத்தி வருகின்றனர்.இதனால் தூத்துக்குடி மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படுகிறது.ஒரு மனிதன் தனது உரிமையைப் பெற போராடலாம் என சட்டம் கூறுகிறது. ஆனால், தூத்துக்குடி வட்டா ரத்தில் கடந்த மூன்று மாதங்களாக பொதுகூட்டம், ஆர்ப்பாட்டம், விழிப்புணர்வுப் பேரணி உள்ளிட்ட எவற்றிற்கும் காவல்துறையினர் அனு மதி தருவதில்லை. போராட்டம் உள்ளிட்டவற்றிற்கு அனுமதி கோருபவர்களை தேவையின்றி அலைக்கழிக்கின்றனர். தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக அரசுக்கு எதிராக சிபிஐமற்றும் அருணா ஜெகதீஷ் ஆணை யத்திடம் சாட்சி கூறுபவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்கின்றனர்.தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பாக அரசுக்கு எதிராக சிபிஐ, அருணா ஜெகதீஷ் ஆணையத்திடம் சாட்சி கூறிய சந்தோஷ் ராஜ் என்பவர் மீது காவல்துறையினர் பல பொய் வழக்குகளை பதிவு செய்துள்ளனர். காவல்துறையினர் சட்டப்படி முறை யாக நடக்கவில்லை. தூத்துக்குடியில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் 24 மணி நேரமும் வழக்கறிஞர் குழு பணியில் இருக்க சட்ட உதவி மையத்தின் உறுப்பினர் செயலருக்கு உத்தரவிட வேண்டும்.ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக போராடியவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்து, சட்டவிரோதமாக கைதுசெய்வதை தடுக்க உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்” எனக் கூறியிருந்தார்.

காவல்துறைக்கு குட்டு

இந்த வழக்கு நீதிபதிகள் சசிதரன், ஆதிகேசவலு அமர்வு முன்பு புதனன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் நேரில் ஆஜராகி அறிக்கை தாக்கல் செய்தார். அதனைப்பார்த்த நீதிபதிகள், கோபமடைந்தனர். “காவல்துறையினர் நடுநிலையோடு செயல்பட வேண்டும்; ஒருதரப்பின ருக்கு சார்பாக செயல்படக்கூடாது; ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக் கூடாது எனப் பேசினால் அது குற்றமா? அப்படியெனில் ஸ்டெர்லைட் ஆலையை திறக்க வேண்டுமென கூறுபவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? காவல்துறையின் அறிக்கையைப் பார்க்கும் போது ஸ்டெர்லைட் ஆலைக்கு சாதகமாக செயல்படுவது போல் தெரிகிறது; ஒருபுறம் ஸ்டெர்லைட் ஆலையை மூடுவோம் என்று அரசு கூறுகிறது; மற்றொருபுறம் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகக் கருத்து தெரிவித்தால் கைது நடவடிக்கை; இது என்ன நிலைபாடு? ஸ்டெர்லைட் போராட்டம் தொடர்பாக உயர்நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டால் அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மேல் முறையீடு செய்வது ஏன்?” என சரமாரியாக கேள்வியெழுப்பினர். மேலும், ஸ்டெர்லைட் ஆலையை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக மைக்கேல் ஜூனியஸ், சந்தோஷ்ராஜ் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் நகல்களைத் தாக்கல் செய்ய தூத்துக்குடி மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளருக்கு உத்தரவிட்டு வழக்கை பிப்ரவரி 14ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.